இன்றைய இறைவார்த்தை

09-12-2014

**திருவருகைக்காலம் – 2ஆம் வாரம் – செவ்வாய்க்கிழமை**
**முதலாம் ஆண்டு**

## முதல் வாசகம்:

இறைவன் தம் மக்களைத் தேற்றுகிறார்.

**இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 40 : 1 – 11**

“ஆறுதல் கூறுங்கள். என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள்” என்கிறார் உங்கள் கடவுள். எருசலேமிடம் இனிமையாய்ப் பேசி, உரத்த குரலில் அவளுக்குச் சொல்லுங்கள். அவள் போராட்டம் நின்றுவிட்டது. அவள் குற்றம் மன்னிக்கப் பட்டது. அவள் தன் பாவங்கள் அனைத்திற்காகவும் ஆண்டவர் கையில் இருமடங்கு தண்டனை பெற்றுவிட்டாள்.

குரலொலி ஒன்று முழங்குகின்றது: பாலைநிலத்தில் ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள். பாழ்நிலத்தில் நம் கடவுளுக்காக நெடுஞ்சாலை ஒன்றைச் சீராக்குங்கள். பள்ளத்தாக்கு எல்லாம் நிரப்பப்படும். மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும். கோணலானது நேராக்கப்படும். கரடு முரடானவை சமதளமாக்கப்படும். ஆண்டவரின் மாட்சி வெளிப்படுத்தப்படும். மானிடர் அனைவரும் ஒருங்கே இதைக் காண்பர்.

ஆண்டவர் தாமே இதை மொழிந்தார். “உரக்கக் கூறு” என்றது ஒரு குரல். “எதை நான் உரக்கக் கூற வேண்டும்?” என்றேன். மானிடர் அனைவரும் புல்லே ஆவர். அவர்களின் மேன்மை வயல்வெளிப் பூவே! ஆண்டவரின் ஆவி இறங்கி வரவே, புல் உலர்ந்து போம். பூ வதங்கி விழும். உண்மையில் மானிடர் புல்லே ஆவர்! புல் உலர்ந்து போம். பூ வதங்கி விழும். நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்.

சீயோனே! நற்செய்தி தருபவளே! உயர்மலை மேல் நின்றுகொள்! எருசலேமே! நற்செய்தி உரைப்பவளே! உன் குரலை எழுப்பு, அஞ்சாதே! “இதோ உன் கடவுள்” என்று யூதா நகர்களிடம் முழங்கு! இதோ என் தலைவராகிய ஆண்டவர் ஆற்றலுடன் வருகின்றார். அவர் ஆற்றலோடு ஆட்சிபுரிய இருக்கிறார்.

அவர்தம் வெற்றிப் பரிசைத் தம்முடன் எடுத்து வருகின்றார். அவர் வென்றவை அவர்முன் செல்கின்றன. ஆயனைப் போல் தம் மந்தையை அவர் மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார். அவற்றைத் தம் தோளில் தூக்கிச் சுமப்பார். சினையாடுகளைக் கவனத்துடன் நடத்திச் செல்வார்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா உமக்கு நன்றி.

**பதிலுரைப் பாடல்:**
**திருப்பாடல்கள் 96 : 1 – 2, 3, 10, 11 – 12, 13 (பல்லவி: எசா 40:10)**
**பல்லவி: இதோ நம் கடவுள் ஆற்றலுடன் வருகின்றார்.**

1. ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள். உலகெங்கும் வாழ்வோரே, ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள். ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள். அவர் பெயரை வாழ்த்துங்கள். அவர் தரும் மீட்பை நாள்தோறும் அறிவியுங்கள். பல்லவி

2. பிற இனத்தார்க்கு அவரது மாட்சியை எடுத்துரையுங்கள். அனைத்து மக்களினங்களுக்கும் அவர்தம் வியத்தகு செயல்களை அறிவியுங்கள். வேற்றினத்தாரிடையே கூறுங்கள்: “ஆண்டவரே ஆட்சி செய்கின்றார். பூவுலகு உறுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அது அசைவுறாது. அவர் மக்களினங்களை நீதி வழுவாது தீர்ப்பிடுவார்.” பல்லவி

3. விண்ணுலகம் மகிழ்வதாக. மண்ணுலகம் களிகூர்வதாக. கடலும் அதில் நிறைந்துள்ளனவும் முழங்கட்டும். வயல்வெளியும் அதில் உள்ள அனைத்தும் களிகூரட்டும். அப்பொழுது, காட்டில் உள்ள அனைத்து மரங்களும் அவர் திருமுன் களிப்புடன் பாடும். பல்லவி

4. ஏனெனில் அவர் வருகின்றார். மண்ணுலகிற்கு நீதித் தீர்ப்பு வழங்க வருகின்றார். நிலவுலகை நீதியுடனும் மக்களினங்களை உண்மையுடனும் அவர் தீர்ப்பிடுவார். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**

அல்லேலூயா, அல்லேலூயா!
ஆண்டவரின் நாள் அண்மையில் உள்ளது.
இதோ அவர் நம்மை மீட்க வரவிருக்கிறார்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

சிறியோருள் ஒருவர்கூட நெறிதவறிப் போகக்கூடாது என்பதே
உங்கள் விண்ணகத் தந்தையின் திருவுளம்.

**தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 18 : 12 – 14**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: "இந்த நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று வழி தவறி அலைந்தால், அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைப்பகுதியில் விட்டுவிட்டு, வழிதவறி அலையும் ஆட்டைத் தேடிச் செல்வார் அல்லவா? அவர் அதைக் கண்டுபிடித்தால் வழிதவறி அலையாத தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் பற்றி மகிழ்ச்சி அடைவதைவிட வழி தவறிய அந்த ஓர் ஆட்டைப் பற்றியே மிகவும் மகிழ்ச்சியடைவார். என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். அவ்வாறே இச்சிறியோருள் ஒருவர்கூட நெறி தவறிப் போகக்கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் திருவுளம்."

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**சிந்தனை:**

நம் இயேசு யார் என்பதை இப்பகுதி மேலும் விவரிக்கிறது. இப்பகுதியின் தொடக்கம் "பெரியவர் யார்" என்பதற்கு விளக்கம் கொடுப்பதோடு தொடங்குகிறது. முடிவில் மனமாற்ற மகிழ்ச்சியுடன் முடிவடைகிறது. இடைப்பட்ட பகுதிகளில் சிறு பிள்ளைகள் (18:4), சிறியோர் (18:6, 18:10, 18:14) பற்றிய குறிப்புகள் உள்ளன. ஒட்டு மொத்தப் பார்வையில், இச்சிறியோரே விண்ணரசின்

பெரியோர் என்பதையும், மனமாற்றம் (18:3) பெற்ற இச்சிறியோரே பெரியோர் என்றும், இவர்களில் எவரையும் இழக்க இறைவன் விரும்பவில்லை என்பதையும் இப்பகுதியில் அறிகிறோம்.

காணாமல் போன ஆடு யார்? எப்படிப்பட்டவர்? என்பதற்கான விளக்கங்கள் தெறிந்தால் மட்டுமே அந்த ஆடு திரும்ப கிடைத்ததால் உண்டாகும் மகிழ்ச்சியைக் கொண்டாட முடியும். காணாமல் போன ஆட்டினை "சிறியோர்" (18:14) என்று குறிப்பிடுகிறார். இச்சிறியோர் யாரெனில் மனம் திரும்பும் மனத்தினர் (18:3), கடவுள் மீது நம்பிக்கை கொண்டோர் (18:6). ஆகவே இத்தகையோர் காணாமல் போவதை நம் இறைவன் ஒருபோதும் விரும்பார். அவர்களுக்காகத் தன்னிடம் இருப்பதையும் (தொண்ணூற்றொன்பது ஆடுகளையும்) தன்னையும் இழப்பதற்கு தயங்க மாட்டார்.

இவ்வாறு தன்னை நம்பியோர் தவறினும், பாவத்தில் விழுந்தாலும், திசை மாறினும், தன்னையும் கொடுத்து இழந்து தேடி கண்டுபிடித்து தானும் மகிழ்வார், பிறரையும் மகிழ்விப்பார். நம்முடைய நம்பிக்கைக்கு நிறைந்த பலன் தந்து ஆசீர்வதிப்பவர் அவரே. நாம் நம் நம்பிக்கையை அதிகரிக்கத் தொடர்ந்து மன்றாடுவோம். நம்பிக்கையினால் நலம் பெறுவோம். நம்பிக்கையினால் வாழ்வடைவோம். ஆமென்.

**********